மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.303/2017</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வரதராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>06.08.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தாயாருக்கும் காலம் சென்ற பழனிச்சாமி என்பவருக்கும், திருமணம் நடைபெற்றது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் என்வசம் இல்லை என்றால் ஆமாம். திருமணம் எந்த தேதியில் நடைபெற்றது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என் தாயாரும், பழனிச்சாமி என்பவரும் வேறு வேறு வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

2. இந்த வழக்கில் 3வது பிரதிவாதியாக உள்ள சரஸ்வதி என்பவர் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன் என்றால் சரிதான். மேற்படி சரஸ்வதி என்பவரின் ஊர் கச்சேரி வலசு என்றால் ஆமாம். பழனிச்சாமியும் சரஸ்வதியும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பழனிச்சாமியின் தகப்பனார் பெயர் முத்துசாமி கவுண்டர் என்றால்

சரிதான். சரஸ்வதிக்கும் பழனிச்சாமி என்பவருக்கும் கடந்த 28.01.1974 இல் கச்சேரி வலசில் உள்ள 3ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து திருமணம் நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. பழனிசாமியின் தாயார் பெயர் கருணையம்மாள் என்றால் சரிதான்.

3. முத்துசாமி கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு கருணையம்மாளும், பழனிச்சாமியும் ஈரோடு ரோடு கதவு எண்.379 வெள்ளகோவிலில் வசித்து வந்தார்கள் என்றால் ஆமாம். பழனிச்சாமி குடியிருந்த வீடு மற்றும் சொத்துக்கள் அவரின் தகப்பனார் முத்துசாமி கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் முத்துசாமி கவுண்டருக்கு 1957 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்துக்களாக பாகம் ஒதுக்கப்பட்ட பரம்பரை சொத்துக்கள் என்றால் சரிதான். பழனிச்சாமி உயிரோடு இருந்த காலத்தில் லாரி ஓட்டியும், செங்கல் சூளை வைத்தும் தொழில் செய்து வந்தார் என்றால் செங்கல் சூளை வைக்கவில்லை லாரி வைத்திருந்தார்.

4. கருணையம்மாள் ஈரோடு ரோடு கதவு எண்.379 முகவரியில் வைத்து தான் காலமானார் என்று சொன்னால் சரிதான். வாதி சாமிநாதன், பழனிச்சாமி மற்றும் நல்ல முத்துவிற்கு பிறந்த மகனா என்றால் இல்லை. சாமிநாதன் யார் என்பதை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அவர் யார் என்பதே எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டு நான் சாமிநாதன் யார் என்பதை குறித்து விசாரித்தேனாஎன்றால்இல்லை. 3ம் பிரதிவாதிக்கும், பழனிச்சாமிக்கும் அசல் வழக்கு எண்.87/2005 என்ற வழக்கானது ஜீவனாம்ச தொகைக்காக நடந்தது என்றால் சரிதான்.

5. அந்த வழக்கில் இந்த வழக்கின் சொத்து விவரங்கள் சொத்து விவரமாக காட்டப்பட்டு தான் 3ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு ஜீவனாம்ச தொகை வழங்கி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது என்றால் ஆமாம். அசல் வழக்கு எண்.87/2005 வழக்கில் இ.ம.எண்.418/2005 என்ற இடைக்கால மனுவினை தாக்கல் செய்து மேற்படி வழக்கு முடியும் வரை அதில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து எந்த வில்லங்க விற்கிரையமும் செய்யக்கூடாது என சரஸ்வதி இடைக்கால பரிகாரம் பெற்றிருந்தார் என்றால் சரிதான்.

6. 3ம் பிரதிவாதி சரஸ்வதிக்கும், பழனிச்சாமிக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் சரிதான் சரஸ்வதி என் மீதும் பழனிச்சாமி மீதும் அசல் வழக்கு எண்.87/2005ல் ஏற்பட்ட தீர்ப்பின்படி பொறுப்பு தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அந்த சொத்துக்களை விற்பனை வில்லங்கத்திற்கு உட்படுத்த கூடாது என்று சொல்லி அசல் வழக்கு எண்.134/2011 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

7. அந்த வழக்கில் நான் எனது வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பழனிச்சாமி அந்த வழக்கில் ஆஜராகி நடத்தாமல் தோன்றா தரப்பினராக இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் இ.ம.எண்.587/2011 என்ற மனுவில் சொத்துக்களை வில்லங்கத்திற்கு உட்படுத்த கூடாது என இடைக்கால உத்தரவு 4.08.2011 இல் பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் ஆமாம். அந்த வழக்கில் எனது பெயரை வரதராஜ், தாயார் பெயர் விஜயா என்று குறிப்பிட்டு தான் போடப்பட்டுள்ளது என்றும் எனது தகப்பனார் பெயர்

குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது அசல் வழக்கு எண்.134/2011 வழக்கில் எனது தகப்பனார் பெயர் குறிப்பிடப்படாதது குறித்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. அசல் வழக்கு எண் 134/2011 வழக்கில் சரஸ்வதி மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்ததால் அவருக்கு கார்டியனாக கனகாம்பரம் தன்னை நியமிக்க கோரி இ.ம.எண்.1161/2013 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி மனு எங்கள் எதிர்வாதத்திற்கு பின்பு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

9. அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது குறித்து கனகாம்பரம் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து இ.ம.எண்.1161/2013 மனுவை திரும்ப விசாரிக்க சொல்லி உத்தரவு பிறவிக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. பின்னிட்டு இ.ம.எண்.1161/2013 மனுவானது நீதிமன்றத்தில் திரும்பவும் விசாரிக்கப்பட்டு எங்கள் எதிர்வாதத்திற்கு பின்னிட்டு மனு அனுமதிக்கப்பட்ட கனகாம்பரம் 3ம் பிரதிவாதிக்கு கார்டியனாக நியமனம் செய்யப்பட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த உத்தரவின் பேரில் நான் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். துரை ராமசாமி நகர் என்பதும், திருவள்ளுவர் நகர் என்பதும், வெவ்வேறு பகுதிகள் என்றும் மேற்படி பகுதிகள் வெள்ள கோவிலில் அமைந்துள்ளது என்றும் சொன்னால் சரிதான்.

10. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணமானது அசல் வழக்கு எண்.87/2005 வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது அசல் வழக்கு எண்.134/2011 வழக்கின் தடை உத்தரவிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.13 மற்றும் பி.வா.சா.ஆ.14 ஆவணங்கள் என் தாயாரின் அடையாளத்தை காட்ட வா.சா.ஆ.5 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது தாயாரால் ஒரு பி.கே.மூர்த்தி என்பவருக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் எனது தாயாருக்கு ஆவண எண்.2373/1982 கிரைய அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து விற்பனை செய்து ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

11. பழனிச்சாமி கொங்கு வேளாளர்கவுண்டர் சமுதாயத்தில் எந்த குலத்தைச் சார்ந்தவர் என்றால் வண்ணக்கன் குலத்தை சார்ந்தவர் என் தாயார் என்ன குலத்தைச் சார்ந்தவர் என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையெப்பம் போட்டுள்ள நபர்கள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த தெரிந்தவர்கள். மேற்படியார்கள் எனது தகப்பனாருக்கோ, எனக்கோ உறவினர்கள் அல்ல என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் அரசு நலத்திட்ட உதவி பெறுவதற்கான அடையாள அட்டைகள் என்றால் சரிதான். மேற்படி அடையாள

அட்டைகள் ஒரு நபரின் உண்மை தன்மையை அறிந்து வழங்கப்படுவதில்லை என்றும், அந்த நபர் கொடுக்கும் தகவலின் அடிப்படையில் வழங்கப்படும் ஆவணங்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

12. பி.வா.சா.ஆ.13 முதல் பி.வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் எங்களால் தகவல் தெரிவிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.16 ஆவணமானது என் தாயார் கொடுத்த மனுவின் அடிப்படையில் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி குறித்த விபரம் தெரிய வராததால் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள சொல்லி உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சரஸ்வதியின் சகோதரர் பெயர் தெரியுமா என்றால் தெரியும் சுப்பிரமணியம். அவர் தற்போது காலமாகிவிட்டார் என்றால் ஆமாம்.

13. அவரது மனைவி தான் கனகாம்பரம் என்றால் அது எனக்கு தெரியாது. இதுவரை கனகாம்பரம் மற்றும் அவரது உறவு விபரங்களை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். மாவு கடை வைத்துள்ளது மட்டும் தெரியும். சுப்பிரமணி என்பவரின் மனைவி தான் கனகாம்பரம் என்று சொன்னால் சரியல்ல. பழனிச்சாமியால் கைவிடப்பட்ட 3ம் பிரதிவாதி சரஸ்வதி என்பவர் தனது உடன்பிறந்த சகோதரர் சுப்பிரமணியன் என்பவரின் மனைவி கனகாம்பரம் என்பவரின் பராமரிப்பில் தான் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

14. சரஸ்வதியின் உறவு முறைகளை நான் ஒப்புக் கொண்டால் அது எனக்கு எனது வழக்கிற்கு விரோதம் ஆகிவிடும் என்ற காரணத்திற்காக நான் அதை மறுத்து சாட்சியளிக்கிறேன் என்றால்

சரியல்ல. சரஸ்வதிக்கும், எங்களுக்கும் நெருங்கிய உறவோ, நட்போ, பேச்சுவார்த்தையோ இல்லை என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பழனிச்சாமி எனக்கு ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்லப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணமானது மோசடியாக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சரஸ்வதிக்கும், பழனிச்சாமிக்கும் விவாகரத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.06 18:42:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்